1998 மார்ச் 27] [கலைஞர் மு. கருணாநிதி]

அடுத்த ஆண்டில் 400 குக்கிராமங்களிலும் தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டு, தொடக்கப்பள்ளி இல்லாத குக்கிராமங்களே தமிழகத்தில் இல்லை என்ற நிலையை உருவாக்குவோம். (மேசையைத் தட்டும் ஒலி) வரும் நிதி ஆண்டில் 200 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தவும், 80 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தவும், 40 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

87. நடப்பாண்டில் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.2,938 கோடிக்கு மாறாக, வரும் ஆண்டில் கல்விக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 3,568 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 50 மேல் நிலைப் பள்ளிகளில் கணினி பாடத்திட்டங்களைத் தொடங்க ரூ. 3.52 கோடியும், 500 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட ரூ. 10 கோடியும், 300 பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள் கட்ட ரூ.10 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

88. மாணவர்களுக்கு இலவச சீருடைகள் வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு நடப்பாண்டில் ரூ.45 கோடியிலிருந்து வரும் ஆண்டில் ரூ. 57 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. **தற்போது பள்ளிகளில் மதிய உணவு பெறும் மாணவ மாணவியர்களுக்கு மட்டுமே இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. வரும் கல்வியாண்டில் இருந்து அரசு, உள்ளாட்சி மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவ மாணவியர் அனைவருக்கும் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும்.** (மேசையைத் தட்டும் ஒலி) இலவசப் பாடப்புத்தகத் திட்டத்திற்கு, வரும் ஆண்டில் ரூ.25 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு இலவசப் பேருந்து அனுமதிச் சீட்டு வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்திய இவ்வரசு, அதனைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. அதற்காக, வரும் ஆண்டில் ரூ. 66 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

89. சுயநிதிக் கல்லூரிகளின் செயல்பாடு பற்றிய டாக்டர் அனந்தகிருஷ்ணன் தலைமையிலான உயர்மட்டக் குழுவின் பரிந்துரையை ஏற்று தமிழ்நாட்டில், பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு புதிய "ஒற்றைச் சாளர முறை"